**சுருக்கம்**


பேரிடர் மேலாண்மை – அதி கனமழை மற்றும் வெள்ள பாதிப்பு – தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் வேளாண் நிலங்களில் படிந்துள்ள மணல் திட்டுக்களை அப்புறப்படுத்திட ரூ.2,88,00,000/–ஐ மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.


---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**
**பேரிடர் மேலாண்மை அலகு, பே.மே.2**

**அரசாணை (நிலை) எண்.92** — **நாள் 08.03.2024**
**சோபகிருது வருடம், மாசி 25**
**திருவள்ளுவர் ஆண்டு 2055**

**படிக்க:**

1. அரசாணை (நிலை) எண். 214, வேளாண்மை – உழவர் நலத் (வே.பொ.1) துறை, நாள். 07.09.2022.
2. அரசாணை நிலை எண்.579, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை (பே.மே.III(2) பிரிவு), நாள் 09.12.2023
3. அரசு செய்தி வெளியீடு எண்.2633, நாள். 30.12.2023.
4. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), கடித எண்.ட்டி.3/260/2024, நாள் 05.01.2024.
5. அரசு கடித எண்.மி.கோ.எண்.1594/பே.மே.2/2024–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (பே.மே–2) துறை, நாள் 05.02.2024.
6. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையரின் கடித எண். இ.இ–1 (2)/46/2024, நாள்: 08.02.2024.

*****

**ஆணை:–**

மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையரின் கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்: –

அ) மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீட்டில் இதர அறிவிப்புகளுடன் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:

"தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தினால் இம்மாவட்டங்களில் விவசாய நிலங்களில் வெள்ளத்தால் அடித்துவரப்பட்ட மண் படிந்துள்ளது. இதனை அகற்றி மீண்டும் விவசாயத்திற்கு ஏற்ற வகையில் சீர்செய்து தரும் பணி மாநில வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக கட்டணமின்றி மேற்கொள்ளப்படும், இதற்கென வெளி மாவட்டங்களிலிருந்து தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் வரவழைக்கப்படும்"

ஆ) மேற்படி அறிவிப்பினைத் தொடர்ந்து, தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) கீழ்கண்டவாறு அறிக்கை அனுப்பியுள்ளார்:-

i. தமிழ்நாட்டில், 2023 டிசம்பர் 17 மற்றும் 18 ஆகிய நாட்களில் தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பெய்த அதிகனமழையின் காரணமாக ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்க மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீட்டில் அறிவித்துள்ளார்கள்.

ii. இச்செய்தி வெளியீட்டில், பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாய நிலங்களின் மேற்பரப்பில் ஆங்காங்கே தோராயமாக 3 அங்குலம் முதல் 24 அங்குலம் உயரத்திற்கு மணல் படிந்துள்ளது (Sand Casting). இவ்வாறு மணல் திட்டுக்கள் விவசாய நிலங்களில் படிந்துள்ளதால், தற்சமயம் பயிரிடப்பட்டுள்ள பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு மட்டுமல்லாமல், வருகின்ற மறுபோக சாகுபடிக்காலங்களில் பயிரிட உகந்ததாகவும் இல்லை. இதனை கருத்தில் கொண்டு நீண்ட கால பயனுள்ள திட்டமாக நிலங்களில் படிந்துள்ள மணல் படிவங்களை சீர்செய்து, பயிர் வளர்ச்சிக்கு ஏற்ற நிலங்களாக செம்மைப்படுத்துவது இன்றியமையாததாகும்.

iii. தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் வேளாண்மைப் பொறியியல் துறையின் 120 பொறியாளர்களைக் கொண்டு வட்டார வாரியாக கள ஆய்வு பணிகள் மேற்கொண்டதில், நெல், வாழை, உளுந்து, பாசிப்பயிறு, மக்காச்சோளம், பருத்தி, மிளகாய் போன்ற விவசாயப் பயிர்கள் சுமார் 1600 ஹெக்டேர் நிலப் பரப்பளவில் மணல் படிந்துள்ளதால் பாதிப்படைந்துள்ளது என கண்டறியப்பட்டுள்ளது என்றும், உரிய காலத்தில் இப்பணிகளை முடித்திட வேளாண்மைப் பொறியியல் துறைக்கு சொந்தமான மண் தள்ளும் இயந்திரம் (Bull Dozer), சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம் (Backhoe with front end loader) மற்றும் டிராக்டர் உடன் கூடிய டிரெய்லர் (Tractor with Trailer) ஆகிய இயந்திரங்களை இப்பணியில் ஈடுபடுத்தி விவசாய நிலங்களில் படிந்துள்ள மணல் திட்டுக்களை பாதுகாப்பாக அப்புறப்படுத்திட இவ்வியந்திரங்களை தேவைக்கேற்ப பிற

மாவட்டங்களிலிருந்து வரவழைத்தும் இப்பணிகள் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் படி, மண் தள்ளும் இயந்திரத்திற்கு மணிக்கு ரூ.1,230/-ம், சக்கர வகை மண் அள்ளும் இயந்திரத்திற்கு ரூ.890/-ம் மற்றும் டிராக்டர் உடன் கூடிய டிரெய்லருக்கு ரூ.500/-ம் அரசால் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

iv. வேளாண் நிலங்களில் படிந்துள்ள மணல் திட்டுக்களை அப்புறப்படுத்தி, நிலத்தினை சீரமைத்திட ஹெக்டேர் ஒன்றுக்கு சராசரியாக ரூ.37,500/- ஆகும் எனவும், 1600 ஹெக்டேர் நிலப் பரப்பளவில் படிந்துள்ள மணல் திட்டுக்களை அப்புறப்படுத்த தோராயமாக ரூ.6.00 கோடி செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

v. வேளாண் நிலங்களில் மணல் படிந்துள்ள பாதிப்பின் தன்மைக்கேற்ப தேவைப்படும் வேளாண் இயந்திரங்கள் ஈடுபடுத்தப்படும் என்றும், வேளாண் இயந்திரங்கள் ஈடுபடுத்தப்படும் கால அளவு பாதிப்பின் தன்மைக்கேற்ப மாறுபடும் என்றும், இப்பணிகள், ஹெக்டேர் ஒன்றுக்கு சராசரியாக ரூ.37,500/- என்ற மதிப்பீட்டில் வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களைக் கொண்டு செய்து முடிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

vi. வேளாண் நிலங்களில் தண்ணீர் வடிந்து, ஈரத்தன்மை உலர்ந்து நிலம் காய்ந்த பிறகு, வேளாண்மைப் பொறியியல் துறைக்கு சொந்தமான வேளாண் இயந்திரங்கள் மூலம் சீரமைப்பு பணிகள் படிப்படியாக தொடங்கப்பட்டு, விரைந்து முடிக்கப்படும் என்றும்,

vii. மேற்கூறியவாறு, பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளின் வேளாண் நிலங்களில் படிந்துள்ள மணல் திட்டுக்களை பாதுகாப்பாக அப்புறப்படுத்தும் பணிகளிலும், மண் அரிமானம் அடைந்த நிலங்களில் தேவையான மண்ணை நிரப்பும் பணிகளிலும் மாவட்ட ஆட்சித்தலைவரின் ஒருங்கிணைப்புடன் வேளாண்மைப் பொறியியல் துறையின் வேளாண் இயந்திரங்களை ஈடுபடுத்தி பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும்,

viii. தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் வேளாண் நிலங்களில் படிந்துள்ள மணல் திட்டுக்களை அப்புறப்படுத்திட ஏதுவாக ரூ.6.00 கோடி வெள்ள நிவாரண நிதியாக, வருவாய் நிர்வாக ஆணையரகத்திற்குரிய கணக்குத் தலைப்பிலிருந்து வேளாண்மைப் பொறியியல் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இ) மேலும், பின்வருவனவற்றிற்கு தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்களுக்கு அனுமதி வழங்கிட அரசு ஆணை பெற்று தரவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

i. வேளாண்மைப் பொறியியல் துறைக்கு சொந்தமான மண் தள்ளும் இயந்திரம் (Bull Dozer), சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம் (Backhoe with front end loader) மற்றும் டிராக்டர் உடன் கூடிய டிரெய்லர் (Tractor with Trailer) ஆகிய வேளாண் இயந்திரங்களை தேவைக்கேற்ப பிற மாவட்டங்களிலிருந்து வரவழைத்து, பயன்படுத்தி தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளின் விவசாய நிலங்களில் படிந்துள்ள மணல் திட்டுக்களை பாதுகாப்பாக அப்புறப்படுத்திடவும்,

ii. வேளாண் நிலங்களில் மணல் படிந்துள்ள பாதிப்பின் தன்மைக்கேற்ப, அவற்றினை சீரமைப்பதற்கு மேற்கூறிய மூன்று வகையிலான வேளாண் இயந்திரங்களை தேவையின் அடிப்படையில் தேவைப்படும் கால அளவிற்கு ஈடுபடுத்திடவும்,

iii. வேளாண் நிலங்களில் படிந்துள்ள மணல் திட்டுக்களை பாதுகாப்பாக அப்புறப்படுத்தும் பணிகளிலும், மண் அரிமானம் அடைந்த நிலங்களில் தேவையான மண்ணை நிரப்பும் பணிகளிலும் மாவட்ட ஆட்சித்தலைவரின் ஒருங்கிணைப்புடன் வேளாண்மைப் பொறியியல் துறையின் வேளாண் இயந்திரங்களை ஈடுபடுத்திடவும்,

iv. மேற்கூறிய பணிகளை சுமார் 1600 ஹெக்டேர் பரப்பளவில் மேற்கொள்ளுவதற்கு தேவைப்படும் ரூ.6.00 கோடியை வெள்ள நிவாரண நிதியாக வருவாய் நிர்வாக ஆணையரகத்திற்குரிய கணக்குத் தலைப்பில் இருந்து வேளாண்மைப் பொறியியல் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்திடவும்,

v. வேளாண்மைப் பொறியியல் துறையின் வேளாண் இயந்திரங்களை மேற்கூறிய பணிகளில் ஈடுபடுத்தியதற்கான வாடகைத் தொகையை வெள்ள நிவாரண நிதியிலிருந்து பெற்று, அரசின் வருவாயாக அரசு வரவின கணக்குத் தலைப்பில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செலுத்திடவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஈ) தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியலின்) முன்மொழிவில் வேளாண் நிலத்தில் படிந்துள்ள மண்/ மணல் திட்டுக்களை அகற்ற ஒரு ஹெக்டேர்க்கு ரூ.37,500/- வீதம் 1,600 ஹெக்டேர் பரப்புள்ள நிலத்திற்கு ரூ.6,00,00,000/- என நிர்ணயம் செய்து மாநில நிவாரண நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று வழங்கிட கோரியுள்ளார்.

உ) மேற்படி தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல் ) அவர்களின் முன்மொழிவினை மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் படி பரிசீலனை செய்யப்பட்டதில், 3 அங்குலத்திற்கு மேல் மண்/ மணல் திட்டுக்களை அப்புறப்படுத்த ஹெக்டேர்க்கு ரூ.18,000/- வீதம் 1,600 ஹெக்டேர் பரப்புள்ள நிலத்திற்கு ரூ.2,88,00,000/- மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்க வழிவகை உள்ளது. தேவைப்படும் மீதித்தொகை ரூ.3,12,00,000/-ஐ மாநில நிதியிலிருந்து வழங்கலாம் என கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. இந்நிலையில், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் வேளாண் நிலங்களில் 3 அங்குலத்திற்கு மேல் படிந்துள்ள மணல் திட்டுக்களை அப்புறப்படுத்திட ஏதுவாக ஒரு ஹெக்டேர்க்கு ரூ.18,000/- வீதம் 1,600 ஹெக்டேர் பரப்புள்ள நிலத்திற்கு ரூ.2,88,00,000/-ஐ மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும் மற்றும் மீதித் தொகையான ரூ.3,12,00,000/-ஐ மாநில நிதியிலிருந்தும் தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), சென்னை அவர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் மாநில செயற்குழுவிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையரின் கருத்துருவினை ஏற்று மாநில செயற்குழுவின் ஒப்புதலுடன், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் வேளாண் நிலங்களில் 3 அங்குலத்திற்கு மேல் படிந்துள்ள மணல் திட்டுக்களை அப்புறப்படுத்திட ஏதுவாக ஒரு ஹெக்டேர்க்கு ரூ.18,000/- வீதம் 1,600 ஹெக்டேர் பரப்புள்ள நிலத்திற்கு ரூ.2,88,00,000/-ஐ(ரூபாய் இரண்டு கோடியே எண்பத்தெட்டு இலட்சம் மட்டும்) மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), சென்னை அவர்களுக்கு வழங்க நிர்வாக அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி-3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2245 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு - 80 பொது - 800 ஏனைய செலவு - மாநிலச் செலவினங்கள் - AA வெள்ளம், தீ, வறட்சி தொடர்பான பணிகளை உடனடியாக மேற்கொள்வதற்கான நிதி உதவி- 309 உதவித்தொகை - 09 ஏனையவை"

(IFHRMS த.தொ.கு 2245 80 800 AA 30909).

5, இவ்வரசாணை நிதி துறையின் அ.சா.எண்.6712858/நிதி (வருவாய்)த் துறை, நாள் 08.03.2024-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வே. ராஜாராமன்,**
**அரசு செயலாளர்.**

**பெறுநர்**

கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும்
மாநில நிவாரண ஆணையர், சேப்பாக்கம். சென்னை-600 005.
வேளாண்மை உற்பத்தி ஆணையர்/ அரசு முதன்மைச் செயலாளர்,
வேளாண்மை - உழவர் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-600 009.

இயக்குநர், (பேரிடர் மேலாண்மை),
தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை, சேப்பாக்கம், சென்னை–5.
தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), சென்னை.
மாவட்ட ஆட்சியர்கள், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம் (கிழக்கு, வடக்கு மற்றும் தெற்கு),
சென்னை–600 001/600 008/600 035.
மாவட்ட கருவூல அலுவலர்கள், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை 600 018/600 035.

**நகல்**

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நீர்வளத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நெடுஞ்சாலைகள் (ம)
சிறு துறைமுகங்கள் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு முதன்மைச் செயலாளர், நிதித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு முதன்மைச் செயலாளர்,
உள் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு முதன்மைச் செயலாளர், பொதுப் பணித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600009.
மாண்புமிகு அமைச்சர், வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மை அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
தலைமைச்செயலகம், சென்னை–600009.
அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை
முதன்மை தனிச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை–600009.
அரசு செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மைத் துறை அவர்களின் தனிச் செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (அநமு3/பே.மே.3) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

8/3/24
பிரிவு அலுவலர்.
8/3/2024